[1972 எப்ரல் 3

மாண்புமிகு டாக்டர் திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) பால் மாவு, அறநிறுவனங்கள் மூலமாக, இனம், சாதி, சமய வேறுபாடின்றி ஏழையருக்குப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக டென்மார்க், அமெரிக்கா போன்ற வெளிநாடுகளால் நன்கொடைப் பொருள்களாக வழங்கப்படுகிறது. இத்தகைய பதினொரு அறநிறுவனங்கள், சென்னை மாநகர் குடிசை வாழ் பகுதிகளில் பால் வழங்குகின்றன. இதுகுறித்து மாநில அரசுக்கு நேரடிப் பொறுப்பு எதுவுமில்லை. ஆயினும், பால்மாவு தவருகப் பயன்படுத்தப்படாமலிருப்பதைத் தவிர்க்க நன்கொடைச் சரக்கு எப்போது வருகிறது, எப்படிப் பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பது குறித்து நிறுவனங்கள் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு அறிவிக்க வேண்டும். இது சரிவரப் பகிர்ந்தளிக்கப்படுவது குறித்து சான்றிதழ் ஒன்றை மாநில உணவுப் பொருள் வழங்கு அதிகாரிகள் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படுவது உணவுப் பொருள் வழங்குதுறை ஆணையாளரால் கண்காணிக்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, லிஸ்ட் தயார் செய்து அதன் அடிப்படையிலே கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் அல்லது பொதுநல நிறுவனங்களின்மூலம் இவைகளைப் பகிர்ந்தளிப்பதற்கான வழிவகைகளை அரசு செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இதற்கெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் தேவையில்லை. நல்ல வாலண்டரி இன்ஸ்டிடியூஷன்ஸ், தனியாகத் தொண்டு செய்யும் நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகள் இவைகளையெல்லாம் முறையாகச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிறுவனங்கள் சென்னையில் 11 நிறுவனங்கள் இப்படிப்பட்ட பாலைக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள்.

சிறுமலைக் காடுகளிலுள்ள நிலங்கள்

*854 வினா—திரு. க. நாகராஜன் : மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுமலைக்காடுகளில் சர்வே செய்யப்பட்ட ரெவின்யூ நிலங்களை ஏற்கனவே நிறைய நிலம் உள்ளவர்களும் பெரிய

1972 ஏப்ரல் 3]

பணக்காரர்களும் ஆக்கிரமித்துக்கொண்டு ஒவ்வொருவரும் 70-80 ஏக்கர் நிலங்களை 3 (d) பட்டா போட்டு அனுபவித்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

(இ) இவர்களிடமிருந்து அந்தப் பட்டாக்களை நீக்கிவிட்டு ஏழைகளுக்கு அந்த நிலங்களைப் பிரித்துக்கொடுக்கச் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) எஸ்டேட்டில் உள்ள ஒரு நிலத்தில் உரிமையாளராக உள்ள ஒருவர் ரயத்துவாரிப் பட்டா பெறுவதற்கு வெளிப்படையாக உரிமையுடையவர் என்று அரசு கருதினால், நிலவரி ஏற்பாட்டு அதிகாரிகளின் முடிவு தெரிகிற வரையில் எந்த நிலத்தின் உடைமையிலிருந்தும் அவரை அரசு அகற்றக் கூடாது என்று தமிழ் நாடு 1948-ஆம் ஆண்டு எஸ்டேட்டுகள் (ஒழிப்பு—ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் 3 (d) பிரிவின் வரம்பு நிபந்தனை விதிக்கிறது. 3 (d) பிரிவில் குறிப்பாக அரசின் காட்டுப் பகுதியில் ஆக்கிரமிப்புச் செய்திருப்பவருக்குப் பட்டா ஏதும் வழங்க வகை செய்யவில்லை; இப்பிரிவின்கீழ் எவருக்கும் பட்டா வழங்கப்படவில்லை.

(இ) மேலே (அ) பகுதியில் தெரிவித்துள்ள நிலையையொட்டி, வழங்கப்பட்டுள்ள பட்டாக்களை ரத்து செய்வதற்கோ நிலங்களைத் திருப்பி எடுத்துக்கொள்வதற்கோ இடமில்லை.

திரு. க. நாகராஜன்: தலைவரவர்களே, பொதுவாகவே மலைப்பகுதிகளில் பட்டா வழங்கும்பொழுது பட்டாப் பெறுபவர்கள் ஏற்கனவே நிலம் வைத்திருந்தால் அவர்களுக்கு வழங்கக் கூடாது என்றும், புதிதாக பட்டா வழங்கும் திட்டத்தில் 5 ஏக்கருக்கு மேல் வழங்கக்கூடாது என்றும் அரசு சட்டம் இயற்றுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மலைப் பகுதியிலே பட்டா வழங்குவது என்பது ஏற்கனவே அவர்களுக்கு உள்ள உரிமையை அடிப்படையாக வைத்து வழங்குவது. ஆனால் மலைப்பகுதிகளிலுள்ள நிலங்களுக்கு உச்சவரம்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இப்பொழுது நாம் விலக்குக் கூடாது என்று சட்டம் கொண்டுவர இருக்கிறோம். பட்டாக் கொடுப்பது

என்பது வேறு, உச்சவரம்பிற்குக் கொண்டுவந்து நிலத்தை எடுப்பது வேறு. மலைப்பகுதியில் இருப்பவைகளைக் கொடுப்பதற்கு தர்க்கா சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், பிளாண்டேஷனுக்கு உச்சவரம்பு வைக்கும்பொழுது இங்கே சாதாரண பிளாண்டேஷனுக்கு இருப்பதுபோலில்லாமல், ஒரு வயபிள் யூனிட்டாக, எஃபிசியன்டாக நடத்துவதற்கு என்னென்ன தேவை என்று பார்த்து வைப்பார்களா? அல்லது வெறும் எண்ணை வைத்து இருப்பதைப் பங்கிட்டுக் கொடுக்கும்வகையில் அன்வயபிள் யூனிட்டாகச் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கனம் அங்கத்தினர் அவர்கள் நான் கூறியதைத் தவறாகப் புரிந்து கொண்டதற்காக வருந்துகிறேன். நான் பிளாண்டேஷனுக்கு உச்சவரம்பு கொண்டு வருவதாகச் சொல்லவில்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, சிறுமலைப் பகுதிகளில் விவசாயிகள் பல வருஷங்களாக அங்கே போய் விவசாயம் செய்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா கொடுப்பது பற்றி அதிகாரிகள் போய்ப் பார்த்து, சர்வே செய்யப்பட்டு, ரெவின்யூ போர்டுக்குப் போய் நம்முடைய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டும் இன்னும் பட்டாச் செய்து கொடுக்க முடியாமல் பல வருஷங்களாக இருக்கிறதே அது சம்பந்தமாக அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, மொத்தம் இந்தச் சுருளிமலை கிராமத்தில் இருக்கும் ஏக்கர் 29,577. இதிலே 7,138 ஏக்கர் பட்டாக் கொடுக்கப்பட்டு விட்டது. மீதம் ஆக்கிரமிப்பில் உள்ளதைப்பற்றி அரசு பரிசீலிக்கிறது. அவர்களுக்கு உரிமை வழங்குவதுபற்றி அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இன்றைக்கு இம்மாதிரி மலைமேல் இருக்கும் நிலங்களுக்கு விதிவிலக்கு ரத்துச் செய்வதாக இன்றைக்கு நாம் சட்டம் இயற்ற இருக்கிறோமே, அப்படியானால்

1972 ஏப்ரல் 3]

இம்மாதிரி சிறுமலை போன்ற பல மலைகளில், ஹில் ஏரியாக்களில் இன்றைக்கு விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அவை எப்பொழுது ரத்து செய்யப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இதைப்பற்றி இரண்டு அவைகளையும் கொண்ட குழு சிபார்சு செய்திருக்கிறது. விரைவிலே சட்டம் கொண்டுவந்து நிறைவேற்று வதாக இருக்கிறோம்.

திரு. இ. ராமசாமி: தலைவரவர்களே, மலைப்பகுதிகளில் இருக்கும் இடங்களில் அடுத்த நாட்டுக்காரர்கள் ஆயிரக்கணக் கான ஏக்கர்களை 99 ஆண்டுகளுக்கு லீசுக்கு எடுத்திருக்கிறார்கள். அந்த லீஸ் முடிந்ததும் அத்தகைய இடங்களை அரசு எடுத்துக் கொள்ளுமா அல்லது அந்த லீசைப் புதுப்பிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அந்தக் குத்தகை ஒப்பந்தக் காலம் முடிவடையும்பொழுது யோசிக்கப்பட வேண்டிய ஒன்று. அப்பொழுது அதைப்பற்றி யோசிக்கலாம்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இந்த பிளாண் டேஷனிலே 25 ஏக்கர் ஒரு வயபிள் யூனிட்டாக இருக்கும் என்று தோட்டங்களை வைத்திருப்பவர்கள் கூறுகிறார்கள். ஆகவே அந்த பிளாண்டேஷனிலே 25 ஏக்கர் என்று உச்சவரம்பு கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தற்போதைக்கு பிளாண்டேஷனிலே நாம் உச்சவரம்பிற்கு அந்தச் சட்டத்திலே இருக்கும் விதிவிலக்கை ரத்துச் செய்வதாக இல்லை. ஆனால் அரசு பரிசீலித்து உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஃபாரஸ்ட் லேண்டிலே எந்த அளவிற்குப் பட்டாக் கொடுப்பதாகக் கொள்கை இருக்கிறது. இப்போ 3 ஏக்கர் நஞ்சை, 1½ ஏக்கர் புஞ்சை என்பதுபோல் இல்லாமல் அதிகப்படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, எல்லா இடத்திலும் ஒரேமாதிரியான நீதிதான் வழங்கப்படும்.